**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**
**ஸ்ரீரங்கம்**
**OS.No. 187/2019**

2024 ஆ ம் ஆண்டு ஜீன் மாதம் 26–ம் நாள் புதன்கிழமை சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் திரு .S. நவீன்குமார் , உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டது.

பெயர்– திரு. சதாசிவம், த/பெ. தங்கவேல்பிள்ளை, வயது –75/2024

மனுவின் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை–

இந்த வழக்கு 2018 ல் தாக்கல் செய்திருக்கிறேன் .இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது வேளாண்மை உதவி இயக்குநர் / நீதிமன்ற ஆணையர் அந்தநல்லூர் அவர்களுடைய அறிக்கையை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல நிலம் தரிசாக உள்ளது . மேற்படி அறிக்கை 2013 தாக்கல் செய்யப்பட்டுவிட்டது அதை மறைத்து இந்த வழக்கு 2018 ல் தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் கிடையாது . வழக்கு தாக்கல் செய்வது சம்பந்தமாக டிரஸ்ட் தீர்மாணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. டிரஸ்ட் கூட்டம் நடந்தமாதிரி எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . எனக்கு வழக்குபோட அதிகாரம் கொடுத்தமாதிரி எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரியல்ல. டிரஸ்ட் கணக்கு மற்றும் தனிக்கை ஆகியவற்றை தாக்கல் செய்யாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தனிநபர் குடும்ப டிரஸ்ட் காத்தபெருமாள் பிள்ளை . டிரஸ்ட்ன் அறங்காவல் என்பதற்காக எந்தவிதமான ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நிலத்தை தரிசாக ஆக்கியது நான்தான் என்றால் சரியல்ல . நீதிமன்ற ஆணையர் அறிக்கை எனக்கு பாதகமாக உள்ளது என்றால் சரியல்ல . நீதிமன்ற ஆணையர் அறிக்கையை படித்து பார்த்தேன் . அதற்கு ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது . நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்திற்கு வரப்பிற்கும் 4 அடி வித்தியாசம் இருக்கும் . வரப்பிற்கு 4 அடி உயரத்தில் வழக்கு இடம் உள்ளது என்றால் சரியல்ல .

நீர்பாசன மட்டத்திலிருந்து உயரத்தில் தாவா சொத்து உள்ளது என்றால் சரியல்ல. நீர்பசணத்திலிருந்து உயரமாக எனது நிலம் உள்ளதனால் பிரதிவாதிகள் மோட்டார் வைத்து நீர்பாசணம் செய்து நிலத்தை விவசாயம் செய்தார்கள் என்றால் சரியல்ல அவர்கள் குத்தகைதாரர்கள் இல்லை. நீதிமன்ற அறிக்கையிலேயே இன்ஜீன் மோட்டார் இருப்பது போன்று என்னுடைய கட்சிக்கு எதிராக உள்ளத என்றால் சரியல்ல. அவர்கள் குத்தகை தாரர்கள் இல்லை மன் எடுப்பதற்காக அலைகிறார்கள். எனது தாவா சொத்திலிருந்து மற்ற சுற்றியுள்ள நிலங்கள் 4 அடி கீழே சென்றதனால் ஏரி பாசனம் கிடைக்காமல் சாகுபடி செய்யப்படவில்லை என்றால் சரியல்ல . உயரத்தை குறைத்தால்தான் சாகுபடி செய்யமுடியும் அவ்வாறு குறைக்க விடமாட்டீகிறீர்கள் என்றால் சரியல்ல . என்னால்தான் பிரதிவாதிகளால் சாகுபடி செய்யமுடியவில்லை என்றால் சரியல்ல . தாவா சொத்துக்களை இன்றைய தேதியில் புகைப்படம் எடுத்து என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் செய்யமுடியும். பிரதிவாதிகள் மண் எடுக்கவந்தபோது நான் தடுத்தேன் என்றால் சரிதான். கருத்தாம்மாள் என்பவர் தரிசாக நிலத்தை விட்டபோது எந்த பசலி கணக்கு என்று எனது பிராதில் குறிப்பிடவில்லை ்என்றால் சுமார் 7 வருடங்கள் இருக்கும். 2003-2004 ல் கருத்தாம்மாள் மண் எடுத்துவிட்டார்கள் என்பவதற்கு பிராதில் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . கருத்தாம்பாள் ஒவ்வொரு பகுதியிலும் 3 அடி ஆழமான குழிகளை வெட்டி மண் எடுத்து குழி ஏற்படுத்திவிட்டார் என்பதாற்கு நான் புகைப்படம் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக குத்தகை ்என்பது 37 1/2 படி என்றால் சரிதான் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை . சாகுபடி செய்தால்தான் அவ்வாறு குத்தகை அளக்கமுடியும் என்றால் சரியல்ல . கருத்தாம்மாள் எந்த செங்கல் சூளைக்கு மண் கொடுத்தார்கள் என்பாதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . கருத்தாம்மாள் மண்ணை வெட்டிஇடத்தை குழியாக்கி தாவா இடத்தைவீணாக்கியது சம்பந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எனது சொத்தை

**வீணாக்கியதற்கு நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல . வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட கிஸ்து ரசீது வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள்தான் தாவா சொத்தில் இன்னாள்வரை இன்ஜீன் மோட்டார் வைத்து சாகுபடி செய்து வருகின்றனர் என்றால சரியல்ல . வழக்கு எனக்கு எதிராக தள்ளுபடி செய்யப்படவேண்டும என்றால் சரியல்ல . உயர்நீதிமன்ற உத்தரவை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல.**

**Sd/-xxxx**

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made is his signature

**Sd/-xxxx**

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam